අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) උපකාරක තක්සේරුව, 2026
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) உதவி மதிப்பீடு, 2026**
**General Certificate of Education (Adv.Level) Supportive Assessment, 2026**

# උපකොරක තකපස්රුව I-II (දෙමළ මාධ්‍යය)
# உதவி மதிப்பீடு I-II (மொழி மூலம் தமிழ்)
# Supportive Assessment I-II (Tamil Medium)

## යුරෝපා ඉතිහාසය
## History of Europe
## ஐரோப்பிய வரலாறு



**Question Paper – I வினாப்பத்திரம் – I (மொழி மூலம் - தமிழ்)**

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව
கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு
Ministry of Education,Higher Education and vocational Education
National Languages and Humanities Branch

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
**Ministry of Education, Higher Education and Vocational Education**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) උපකාරක තක්සේරුව, 2026
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) உதவி மதிப்பீடு, 2026**
General Certificate of Education (Adv.Level) Supportive Assessment, 2026

**යුරෝපා ඉතිහාසය I (I කොටස)**
**ஐரோப்பிய வரலாறு I (பகுதி i)**
**History of Europe I (Part I)**

**25 B I**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time -10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

அறிவுறுத்தல்கள்:
- ❖ இவ்வினாத்தாள் பகுதி I, பகுதி II ஆகிய இரு பிரிவுகளைக் கொண்டது.
- ❖ பகுதி I இல் 1 – 40 வரையிலான எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய விடைகளை எழுதுக
- ❖ பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.
- ❖ இரண்டு பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் மூன்று மணித்தியாலங்களாகும். விடைகளை எழுதி முடித்த பின்னர், பகுதி I இற்கான விடைத்தாள்களை பகுதி II இற்கான விடைத்தாள்களுடன் இணைத்து கையளிக்குக.

## பகுதி I

- இல 01 தொடக்கம் 10 வரை தரப்பட்டுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன அவற்றுள் ஒன்று மாத்திரம் ஏதோ ஒரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் **பொருந்தாது** உள்ளது அந்த **பொருந்தாத** பெயரை இனங்கண்டு அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

1. (1) தேம்ஸ் (2) எல்ப் (3) அசேவ்
   (4) நிப்பர் (5) ரோன் (.........)

2. (1) ஆர்கோஸ் (2) மெகாரா (3) மிலேடஸ்
   (4) கோல் (5) கொரிந்த் (.........)

3. (1) எனெக்சிமின்ஸ் (2) பெரிகிலிஸ் (3) சொலொன்
   (4) கிளிஸ்தினிஸ் (5) சிசரோ (.........)

**4.** **(1)** மன்னராட்சி **(2)** சமய குருமார் **(3)** தன்னலக்குழு
   **(4)** சமூக ஒடுக்குமுறை **(5)** ஜனநாயகம் **(.........)**

5. (1) டெசிடஸ் (2) துசிடீட்ஸ் (3) லிவி
   (4) ஹெரடோட்டஸ் (5) செனகா (.........)

6. (1) பல்போவா (2) வோல்ட ராலே (3) கடலோடி ஹென்றி
   (4) மார்க் விடே (5) லா சலே (.........)

7. (1) ஜோன் டெட்சல (2) ஜோன் ஹஸ் (3) ஜோன் கல்வின்
(4) ஜோன் வைக்ளிப் (5) இராஸ்மஸ் (.........)

8. (1) அபேசியஸ் (2) மிராபோ (3) ஜீன் போல் மராத்
(4) ஒலிவர் குரம்வெல் (5) ஜோர்ஜ் ஜெக் டென்டன் (.........)

9. (1) ஐலா செபெல் (2) வெரோனா (3) லைபெக்
(4) டிரப்போவ் (5) ஜெனா (.........)

10. (1) வூட்ரோ வில்சன் (2) பிரேங்ளின் ரூஸ்வெல்ட் (3) லொயிட் ஜோர்ஜ்
(4) கிளமன் சோ (5) விக்டோரியோ ஒலென்டோ (.........)

- இல 11 – 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடி சொற்கள்** வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு, **அதன் இலக்கத்தை எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

11. (1) சியுஸ் - வானுக்கு அதிபதி
(2) எரஸ் - சூரியக் கடவுள்
(3) டயனீசஸ் - வைன் பானத்திற்கு அதிபதி
(4) அப்ரடயிட் - காதலுக்கு அதிபதி
(5) புரசயிடன் - சமுத்திரத்திற்கு அதிபதி (.........)

12. (1) தோமஸ் ஹொப்ஸ் - இளரவசன்
(2) அரிஸ்டோட்டில் - அரசியல்
(3) பிளேட்டோ - குடியரசு
(4) புனித எக்வயினாஸ் - சும்மா தியலோஜிகா
(5) புனித ஒகஸ்டீன் - கடவுளின் நகரம் (.........)

13. (1) கிறிஸ்டோபர் கொலம்பஸ் - கரிபியன் தீவுகளில் தரையிறங்கியமை
(2) நியுனிஸ் த பல்போவா - பனாமா தேச எல்லைக்கு வருகை தந்தமை
(3) வஸ்கொடகாமா - ஆபிரிக்காவின் தென் முனையை அடைந்தமை
(4) பர்னான்டோ கொடேஸ் - மெச்சிகோவைக் கண்டுபிடித்தமை
(5) பிரான்சிஸ்கோ பிசாரோ - பேரு நாட்டைக் கைப்பற்றியமை
(.........)

14. (1) வின்சர் - இங்கிலாந்து
(2) டியுடர் - இங்கிலாந்து
(3) ஸ்டுவர்ட் - இங்கிலாந்து
(4) பிரகன்சா - இங்கிலாந்து
(5) ஹெனோவர் - இங்கிலாந்து (.........)

15. (1) மெடிசி - புளோரன்ஸ்
(2) எஸ்தே - பெராரா
(3) ஸ்போர்சா - மிலான்
(4) கொன்சாகா - மென்டுவா
(5) வெலோய் - நேப்பிள்ஸ் (.........)

- 16 -20 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள்/திததிகளின் தொகுதிகள் X,Y என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. Y நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள்/ கூற்றுகள்/திகதிகள் X நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் தரப்படவில்லை. Y நிரலில் உள்ளவற்றை X நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியான ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சரியான சேர்மானத்தின் இலக்கத்தைத் தெரிவு செய்து அடைப்புக் குறிக்குள் எழுதுக.

16.

| X | Y |
|---|---|
| (I) ஹோமர் | A – அன்டிகன் |
| (II) யூரிபீடிஸ் | B - த கிளவுட்ஸ் |
| (III) சொபொக்லிஸ் | C – ட்ரொஜன் விமன் |
| (IV) அரிஸ்டோபெனிஸ் | D – இலியட் ஒடிசி |
| (V) ஹெஸியட் | E – வேலையும் நாளும் |

(1) ABCDE (2) BEDCA (3) CADBE (4) DCABE (5) DCBEA (.........)

17.

| X | Y |
|---|---|
| (I) ரபாயல் சென்சிட் | A - இறுதித் தீர்ப்பு |
| (II) மைக்கல் அஞ்சலோ | B- எதென்ஸ் பாடசாலை |
| (III) பொட்டிஷெல்லி | C- வீனசின் பிறப்பு |
| (IV) லியானாடோ டாவின்சி | D- ஆதாமும் ஏவாலும் தோட்டத்திலிருந்து வெளியேறல் |
| (V) மெசெக்சியோ | E- இறுதி இராப்போசனம் |

(1) ACEDB (2) BACED (3) CEABD (4) DBCAE (5) ECBAD (.........)

18.

| X | Y |
|---|---|
| (I) பிரான்சிய புரட்சி | A- சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் |
| (II) மகோன்னத புரட்சி | B- புத்திஜீவிகளின் புரட்சி |
| (III) அமெரிக்க புரட்சி | C- அரசரை மிஞ்சி பாராளுமன்றம் அதிகாரத்தைத் தன்வசப்படுத்திக் கொள்ளல் |
| (IV) 1848 புரட்சி | D- உணவு, நிலம், சமாதானம் |
| (V) ரஷ்ய புரட்சி | E- பிரதிநிதித்துவம் இன்றேல் வரியும் இல்லை |

(1) ACEBD (2) BDECA (3) CEDAB (4) EACDB (5) EBDAC (.........)

19.

| X | Y |
|---|---|
| (I) ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் | A- ஜெனீவா |
| (II) உலக வங்கி | B- வியான்னா |
| (III) உலக சுகாதார தபானம் | C- பரீஸ் |
| (IV) சர்வதேச அணுச் சக்தி நிறுவனம் | D- நிவ்யோர்க் |
| (V) ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, கலாசார, விஞ்ஞான அமையம் | E- வொஷிங்டன் |

(1) BACED (2) CABDE (3) DBCAE (4) DEABC (5) EACDB (.........)

20.

| X | Y |
|---|---|
| (I) மிக்காயேல் கொர்பச்சேவ் | A- சோவியத் தேசத்தின் இறுதி ஆட்சியாளன் |
| (II) மார்ஷல் டிட்டோ | B- யுகொஸ்லேவிய ஜனாதிபதி |
| (III) கிளமன் அட்லி | C- ''சொலிடரிட்'' தொழிலாளர் சங்கத் தலைவர் |
| (IV) கொன்றாட் எட்னுவர் | D- இரண்டாம் உலகப் போரின் பின்னர் இங்கிலாந்தின் முதல் பிரதமர் |
| (V) லெச் வலேசா | E- ஜேர்மன் சமஸ்டி கூட்டாட்சியின் முதல் சான்சலர் |

(1) ABDEC (2) BEACD (3) CEABD (4) DECAB (5) EDACB (.........)

- 21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது. அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக் குறியினுள் எழுதுக.

21. **இஸ்லாம் மதம்**
    (1) ஏக தெய்வக் கொள்கையை வலியுறுத்துகிறது.
    (2) முகம்மது நபியவர்கள் போதித்த தர்மமாகும்
    (3) முகம்மது நபியவர்கள் ஜெரூசலத்தில் பிறந்தார்.
    (4) இஸ்லாம் சமயத்தின் புனித நூல் குர்ஆன் ஆகும்.
    (5) இஸ்லாம் சமயத்தைப் பின்பற்றுபவர்கள் முஸ்லிம்கள் ஆவார். (.........)

22. **மறுமலர்ச்சி**
    (1) சமய சீர்திருத்த இயக்கத்தின் நேரடி விளைவொன்றாகும்.
    (2) கி.பி 1453 இல் கொன்ஸ்தாந்துநோபல் துருக்கியரால் கைப்பற்றப்பட்டமை இதற்கு உடனடிக் காரணமாக அமைந்தது.
    (3) இத்தாலியை மையமாகக் கொண்டு ஆரம்பமானது.
    (4) ஐரோப்பாவின் புதிய யுகத்தின் ஆரம்பமாகும்.
    (5) பின்னர் ஐரோப்பாவின் ஏனைய நாடுகளுக்கும் பரவியது. (.........)

23. **முப்பது ஆண்டு போர்**
    (1) ஜேர்மனியை மையமாகக் கொண்டு இப்போர் ஆரம்பமானது.
    (2) புனித உரோமப் பேரரசின் வெற்றியுடன் போர் நிறைவுற்றது.
    (3) கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்தவர்களுக்குமிடையில் நடைபெற்றது.
    (4) வெஸ்டபேலியா சமாதான உடன்படிக்கையுடன் சமயப் போர் முடிவுற்றது.
    (5) கி.பி.1648 இல் பிரான்சின் தலையீட்டினால் இப்போர் முடிவுற்றது. (.........)

24. **ஜேர்மனியை ஐக்கியப்படுத்தல்**
    (1) 19ஆம் நூற்றாண்டளவில் ஜேர்மனி அரசு 350 பகுதிகளாக பிரிந்து காணப்பட்டது.
    (2) வியான்னா ஒப்பந்தத்தின் மூலம் ஜேர்மனிய அரசு 39 பிராந்தியங்களாக ஒழுங்கமைக்கப்பட்டது.
    (3) பிரஷ்யாவின் தலைமையில் ஜேர்மனி ஐக்கியப்பட்டது.
    (4) ஜேர்மனியை ஐக்கியப்படுத்தும் இயக்கத்தில் மெட்டர்னிக் முன்னணி வகித்தார்.
    (5) ஐக்கிய ஜேர்மனியின் முதல் பேரரசர் முதலாம் வில்லியம் ஆவார். (.........)

25. **ஐக்கிய நாடுகள் சபை**
    (1) இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் உலக சமாதானத்தைப் பாதுகாப்பதன் பொருட்டு உருவாக்கப்பட்டது.
    (2) கி.பி.1945 இல் உருவாக்கப்பட்டது.
    (3) இதன் பிரதான உத்தியோகபூர்வ நிறுவனமொன்றாக பொதுச்சபை விளங்குகின்றது.
    (4) ஐக்கிய நாடுகள் சபையின் முதல் செயலாளர் நாயகம் ட்ரிக்விலி ஆவார்.
    (5) தலைமை அலுவலகம் ஜெனீவாவில் அமைந்துள்ளது.
    (.........)

- 26 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A),(B),(C),(D)** என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவு செய்து

(A) யும் (B) யும் மாத்திரம் சரியாயின் ................................................ 1 எனவும்
(A) யும் (C) யும் மாத்திரம் சரியாயின்................................................ 2 எனவும்
(B) யும் (C) யும் மாத்திரம் சரியாயின்................................................ 3 எனவும்
(C) யும் (D) யும் மாத்திரம் சரியாயின்................................................ 4 எனவும்

**வேறு விடைகளின்** எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் ....... 5 எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| (A) யும் (B) யும் மாத்திரம் சரி | (A) யும் (C) யும் மாத்திரம் சரி | (B) யும் (C) யும் மாத்திரம் சரி | (C) யும் (D) யும் மாத்திரம் சரி | **வேறு விடைகளின்** எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |

26. கீழே தரப்பட்டுள்ள நூல்களுள் இஸ்லாமிய நாகரிகத்தின் கொடைகள் தொடர்பில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) அவிசின்னா
(B) ஈனிட்
(C) ஆயிரத்தொரு இரவுகள்
(D) இலெக்ட்ரா (.........)

27. கீழே தரப்பட்டுள்ள இனத்தவர்களுள் மேற்கு உரோமப் பேரரசை ஆக்கரமித்த மிலேச்ச கோத்திரத்தார் தொடர்பில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) லிடியன்
(B) பினீஷியன்
(C) வெண்டல்
(D) விசிகொத் (.........)

28. கீழே தரப்பட்டுள்ளனவற்றுள் எதிர்மத சீர்திருத்தத்தின் பிரதான அங்கங்கள் தொடர்பில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) ஜெனீவாவின் கல்வினிஸ் சபை
(B) யேசு சபை
(C) அதர்ம ஒழிப்புச் சபை
(D) டிரென்ட் சம்மேளனம் (.........)

29. கீழே தரப்பட்டுள்ளோருள் வியான்னா மாநாட்டில் பங்குகொண்ட ஐரோப்பிய தலைவர்கள் தொடர்பில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) சால்ஸ் டெலிரென்ட்
(B) காசல்ரீ
(C) ரிப்பன் டொப்
(D) நெக்கர் (.........)

30. இரண்டாம் உலகப் போர் தொடர்பில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) நேச நாடுகள் மற்றும் மத்திய ஐரோப்பிய வல்லரசு நாடுகள் ஆகிய இரு அணிகளுக்கிடையே ஏற்பட்டது.
(B) 1939 இல் ஜேர்மனி போலந்தை ஆக்கிரமித்ததுடன் ஆரம்பமானது.
(C) பேர்ள் துறைமுகத்திற்கு ஜப்பான் குண்டு வீசியதைத் தொடர்ந்து அமெரிக்கா யுத்தத்தில் பிரவேசித்தது.
(D) 1940 இல் ஜேர்மனி நிபந்தனையற்ற வகையில் சரணடைந்தது. (.........)

- 31 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது. அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக் குறியினுள் எழுதுக.

31. தேசிய அரசொன்றின் பிரதான பகுதிகள்
(1) வரையறுக்கப்பட்ட தேச எல்லை (2) நிலையான இராணுவம்
(3) பலவீனமான மன்னராட்சி (4) பலமான மத்திய அரசு (5) தேசிய ஒருமைப்பாடு
(.........)

32. கைத்தொழில் புரட்சிக் காலப்பகுதியின் நெசவுக் கைத்தொழில் சார்ந்த கண்டுபிடிப்பு
(1) பறக்கும் நூனாழி (2) ஸ்பினிங் ஜெனி (3) நீர்ச் சட்டகம்
(4) மியூல் இயந்திரம் (5) ரோலர் இயந்திரம் (.........)

33. கி.பி. 1848 இல் புரட்சி ஏற்பட்ட நாடுகள்
(1) ஜேர்மனி (2) ரஷ்யா (3) இத்தாலி
(4) பிரான்ஸ் (5) ஆஸ்திரியா (.........)

34. பிரான்சிய புரட்சியுடன் தொடர்புடைய முக்கிய நிகழ்வு
(1) டெனிஸ் மைதான உறுதிமொழி (2) பஸ்டில் தாக்கப்படல்
(3) தேசிய சபை ஒன்றுகூடல் (4) பொஸ்டன் தேநீர் விருந்து
(5) மத்திய வகுப்பினரின் தலைமைத்துவம் (.........)

35. சோவியத் நாட்டின் ஆட்சியாளர்கள்
(1) யூரி ககாரின் (2) நிகிதா குருஷேவ்
(3) அலக்சி கொசிகின் (4) லியோனிட் பிரஷ்னெப் (5) ஆந்ர பொப்
(.........)

- **36** தொடக்கம் **40** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1,2,3,4 ,5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக

| | **முதல் கூற்று** | **இரண்டாம் கூற்று** |
|---|---|---|
| 1 | சரியானது | பிழையானது |
| 2 | சரியானது | சரியானது |
| 3 | பிழையானது | பிழையானது |
| 4 | பிழையானது | சரியானது |
| 5 | சரியானது | சரியாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விவரிக்கின்றது. |

| | **முதல் கூற்று** | **இரண்டாம் கூற்று** | |
|---|---|---|---|
| 36 | எதன்ஸ் மற்றும் ஸ்பாட்டாவுக்கு இடையில் நடைபெற்ற யுத்தம் பெலபனீசியன் யுத்தம் எனப்படும். | அரசியல் பற்றி அரிஸ்டோட்டில் என்பரவால் எழுதப்பட்ட மிகவும் பிரசித்தம் பெற்ற நூலாக குடியரசு எனும் நூல் விளங்குகின்றது. | (.........) |
| 37 | ஏறத்தாழ கி.பி. 590 அளவில் மகா கிரகரி பாப்பரசரின் கீழ் பாப்பரசர் பதவி ஆரம்பமானது. | கிறிஸ்தவ சமயத்தின் செல்வாக்கு காரணமாக ஐரோப்பிய சமூகம் பாரிய வளர்ச்சி கண்டதுடன் தெய்வீகவாதக் கொள்கை அதிகளவில் வலியுறுத்தப்பட்டது. | (.........) |
| 38 | பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையீடு செய்தல் வணிக வாதத்தின் பிரதான பண்பொன்றாகும் | 12ஆம் நூற்றாண்டாகும் போது வணிக மற்றும் கல்வித்துறை என்பன வளர்ச்சி கண்டன. | (.........) |
| 39 | புரட்சி இடம்பெற்ற 1789 முதல் 1848 வரையான காலப்பகுதிக்குள் சார்டிஸ்ட் இயக்கம் பிரான்சில் வளர்ச்சி கண்டது. | லூயி நெப்போலியன் கி.பி 1848இல் பிரான்சின் இரண்டாவது கூட்டாட்சியின் ஜனாதிபதியாக தெரிவானார். | (.........) |
| 40 | வீ.ஐ.லெனின் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையை ஜோசப் ஸ்டாலின் தொடர்ந்து நடைமுறைப்படுத்தினார். | மேலைத் தேசத்தவருடனான அமைதியான சகவாழ்வை நோக்கமாகக் கொண்டதாக ஜோசப் ஸ்டாலினின் வெளிநாட்டுக் கொள்கை அமைந்திருந்தது. | (.........) |

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
**Ministry of Education, Higher Education and Vocational Education**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) උපකාරක තක්සේරුව, 2026
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) உதவி மதிப்பீடு, 2026**
General Certificate of Education (Adv.Level) Supportive Assessment, 2026

**යුරෝපා ඉතිහාසය II (II කොටස)**
**ஐரோப்பிய வரலாறு II (பகுதி ii)**
**History of Europe II (Part I)**

**25 T II**

**ஐரோப்பிய வரலாறு – கிரேக்க – உரோம காலம் முதல் கி.பி 1989 வரை**

**அறிவுறுத்தல்கள்**
- **நான்கு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்**
- **பகுதி II ஆனது ABC ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டது.**
- **பகுதி A யின் வினா கட்டாயமானது**
- **பகுதி BC ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மேலும் மூன்று வினாக்களுக்கு விடை தருக**

**(முதலாம் வினாவிற்கு விடையளிப்பதற்கு இலங்கை புறவுருவப்படம் பகுதி I உடன் வழங்கப்பட்டுள்ளது.)**

## பகுதி A

1. உமக்கு வழங்கப்பட்ட புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

| | | |
|---|---|---|
| (i) அயர்லாந்து | (ii) மர்மரா கடல் | (iii) டோவர் நீரிணை |
| (iv) வோல்கா நதி | (v) யூகோஸ்லேவியா | (vi) சுவிட்சர்லாந்து |
| (vii) கீறீட் தீவு | (viii) சென் பீட்டர்ஸ்பேர்க் | (ix) டன்சிக் |
| (x) லிவர்பூல் | (xi) பொஸ்பரஸ் நீரிணை | (xii) வட கடல் |

(சரியாக குறித்துப் பெயரிடுவதற்கு 1 புள்ளி வீதம் )

## பகுதி B

02. (i) நகர அரசொன்றாக விளங்கிய உரோம், பேரரசொன்றாக மாற்றமடைந்தமையின் பிரதான கட்டங்களை சுருக்கமாக விபரிக்குக. (புள்ளிகள் 08)
(ii) உரோம கலாசாரத்தின் பிரதான பண்புகளை பரிசீலிக்குக. (புள்ளிகள் 08)

**03.** தேசிய அரசுகளின் அடிப்படை பண்புகளைப் பரிசீலனை செய்து, இங்கிலாந்து அல்லது ஸ்பானிய தேசிய அரசுகளின் வளர்ச்சியின் முக்கிய கட்டங்களை விமர்சன ரீதியாக ஆராய்க. (புள்ளிகள் 16)

04. "அரசியல் மற்றும் பொருளாதாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்க சுதந்திர போராட்டம் ஆரம்பமானது."

(i) அமெரிக்க சுதந்திர போராட்டத் தலைவரை பெயரிடுக. (புள்ளி 01)
(ii) பிரித்தானியர் வட அமெரிக்க பிரிதேசங்களுக்கு குடிபெயர்ந்தமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (புள்ளிகள் 02)
(iii) ஆங்கிலேயர் வட அமெரிக்காவில் நிறுவிய குடியேற்றங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (புள்ளிகள் 03)

(iv) அமெரிக்க சுதந்திர போராட்டத்திற்கு ஏதுவாக அமைந்த பொருளாதார மற்றும் அரசியல் காரணிகளை விமர்சன ரீதியாக ஆராய்க. (புள்ளிகள் 04)

(v) ''அமெரிக்க சுதந்திரப் போராட்டமானது அமெரிக்காவில் மட்டுமன்றி ஐரோப்பாவிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது'' அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தின் விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றை விளக்குக. (புள்ளிகள் 06)

05. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

(i) கிறிஸ்தவ நாகரிகம்

(ii) நிலமானிய சமூகம்

(iii) 1688 மகோன்னத புரட்சி

(iv) சமய சீர்த்திருத்தங்கள் (புள்ளிகள் 08 x 2 = 16 )

## பகுதி C

06. (i) நெப்போலியன் பொனபாட் பிரான்சின் ஆட்சியாளன் ஆகிய விதம் பற்றி விளக்குக. (புள்ளிகள் 06)

(ii) நெப்போலியன் பொனபாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு அவரது பணிகளை மதிப்பிடுக. (புள்ளிகள் 10)

07. (i) தடைகளை வெற்றி கொண்டு இத்தாலியை ஐக்கியப்படுத்துவதில் மெசினி, கவூர் மற்றும் கரிபால்டி ஆகிய தலைவர்களின் பணிகளை ஆராய்க. (புள்ளிகள் 16)

**08. ''ஐரோப்பா இரு அதிகார முகாம்களாக பிளவுபட்டமையானது முதலாம் உலகப் போர் ஏற்படுவதற்கு மூல வித்தாக அமைந்தது''**

(i) முதலாம் உலகப் போரின் போது ஜேர்மனியின் பேரரசனாக விளங்கியவர் யார்? (புள்ளி 01)

(ii) முதலாம் உலகப் போருக்கு ஏதுவாக அமைந்த உடனடிக் காரணத்தை சுருக்கமாக விளக்குக. (புள்ளிகள் 02)

(iii) ஐரோப்பா இரு எதிர் முகாம்களாக பிரிந்த விதம் பற்றி சுருக்கமாக விளக்குக (புள்ளிகள் 04)

(iv) முதலாம் உலகப் போருக்கு ஏதுவாக அமைந்த காரணிகளைப் பற்றி ஆராய்க. (புள்ளிகள் 09)

09. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

(i) பிரான்சிய புரட்சிக்கு ஏதுவாக அமைந்த காரணிகள்

(ii) இரண்டாம் உலகப் போரின் விளைவுகள்

(iii) வீ.ஐ. லெனின்

(iv) பனிப்போர் (புள்ளிகள் 08 x 2 = 16 )

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
**Ministry of Education, Higher Education and Vocational Education**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) උපකාරක තක්සේරුව, 2026
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) உதவி மதிப்பீடு, 2026**
General Certificate of Education (Adv.Level) Supportive Assessment, 2026

**යුරෝපා ඉතිහාසය II (II කොටස)**
**ஐரோப்பிய வரலாறு II (பகுதி ii)**
**History of Europe II (Part I)**

25 | T | II

வினா எண்
Question No 1

சுட்டெண்
Index no ..........................................................................

